520—

பனைப்பொருள்கள் தொழிற்பேட்டை அமைத்தல்

***36669—** *டாக்டர் வெ. சரோஜா:*

மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பனைப் பொருள்கள் தொழிற்பேட்டையை சங்ககிரி தொகுதி, எலச்சிப்பாளையம் ஒன்றியத்தில் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): சங்ககிரி தொகுதி, எலச்சிப்பாளையம் ஒன்றியத்தில் பனைப்பொருட்கள் தொழிற்பேட்டையை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை. இருப்பினும் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனை மரத் தொழிலாளர்களுக்கு உயிர் ஊட்டியுள்ள மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில், தொழில் துறையில் பின்தங்கிய வட்டமாக அறிவிக்கப்பட்டுள்ள, என்னுடைய தொகுதியில் எலச்சிப்பாளையம் ஒன்றியம், மோலிப்பள்ளி கிராமம், பொன்னிமேட்டில் தேசிய பனை வள கூட்டுறவு சம்மேளனத்தின் சார்பாக 20 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு பல ஆண்டுகள் ஆகின்றன. 10,000-க்கும் மேற்பட்ட பனை மரத் தொழிலாளர்கள் பயன் அடையும் வகையில் அந்த இடத்தில், இந்த ஆண்டு இல்லாவிட்டாலும் வரும் ஆண்டிலாவது அதைச் செயல்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நானும் சொன்னேன். தற்போது இல்லை என்றுதான் சொன்னேன். எதிர்காலத்தில் பரிசீலிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறேன். பனைப்பொருட்கள் வளர்ச்சிக்காக தனியாக ஒரு வாரியம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருவதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். அந்த வாரியம் முழுமையாக செயல்படும் நேரத்தில் இதுபோன்ற செயற்குறிப்புகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டு அந்தத் தொழிற்பேட்டைகளை அமைக்க வாய்ப்பு இருக்கிறது என்று எடுத்துக் கூறுகிறேன்.

பிற்பகல் 11-05

டாக்டர் வெ. சரோஜா: பேரவைத் தலைவர் அவர்களே, எக்கனாமிக் எம்ப்ளாய்மென்ட் பார் விமன் என்பதை கருத்தில் கொண்டு கிராமப்புற மக்கள் பொருளாதாரத்தில் முன்னேற வேண்டும் என்ற உன்னத நோக்கோடு செயல்பட்டு வரும் புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சியில் அப்பகுதியில் உள்ள பெண்கள் பயனடையும் வண்ணம், அந்தப் பகுதியில் பணிபுரியும் அந்தத் தொழிலை நன்கு உணர்ந்த அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த பெண்களைக் கொண்ட பனைப் பொருள் கூட்டுறவுச் சங்கம் அமைத்து அதன் மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த வருடம் அதைச் செயல்படுத்த செயற்குறிப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி: பேரவைத் தலைவர் அவர்களே, பெண்கள் சமுதாய முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி இன்று தமிழ்ப் பெண்களின் கண்மணியாக தமிழ்நாடு பெண்களின் முதல் மணியாக (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது பர்ஸ்ட் லேடி ஆஃப் தி தமிழ்நாடு என்று சொல்லக்கூடிய அளவில் பல்வேறு சிறப்புகளைப் பெற்று தமிழகத்தில் நிலையான ஒரு நல்லாட்சியை நடத்திக் கொண்டிருக்கக் கூடிய புரட்சித் தலைவியின் ஆட்சிக் காலத்தில் இது போன்ற பனை ஓலைகளின் மூலம் செய்யப்படும் பல்வேறு பொருட்கள், கயிறு, தும்பு போன்றவைகள் தயாரிக்கப்படக் கூடிய தொழில்களுக்கு அதிகமான முறையிலே பெண்களைத்தான் பயன்படுத்துகிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க பின்னர் எடுத்துக் கொள்வதாக அறிவிக்கப்பட்ட வினாக்கள் இப்போது எடுத்துக்கொள்ளப்படுகின்றன. வினா எண் 503. திரு. சி. குழந்தைவேலு. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

503—

அன்னவாசல் ஒன்றியத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

***25338**—*திரு. சி. குழந்தைவேலு:*

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தொகுதி, அன்னவாசல் ஒன்றியம், வடசேரிபட்டி மற்றும் குன்னாண்டார் கோவில் ஒன்றியம், கொங்குதிறையன்பட்டியில் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?